# புறநானூற்றுப் புதையல் – 12

## கடமை வெல்லும்

கதை: இ.ஜே.சுந்தர்
ஓவியம்: ஷேக்







கணவர்: நம் நாட்டின் மறக்குடியினர் வீரம் செழிக்க அவள் பாடும் பணி தொடரும்.
சேரன்: சிறந்த குடும்பம். உங்கள் குடும்பத்தின் மேன்மைக்கு யார் காரணம்?
3
கணவர்: கடமை உணர்ச்சியைப் போற்றும் என் மனைவியே காரணம்.
சேரன்: அந்த உணர்வை அனைவரும் பெற வழி சொல்லுங்கள் அம்மையே!


பொன்முடியார்: என் மகனே என் சொத்து. அவனைப் பெற்றதோடு முறையாக வளர்ப்பது என் தலையாய கடமை.
அரசன்: ஒரு தந்தையின் கடன் என்னவோ?
புலவர்: ஓர் ஆணைச் சிறந்தவனாக்கும் முதன்மைப்பணி தாயினுடையதுதான் என்று சரியாகச் சொன்னீர்கள்.
பொன்முடியார்: மகனைச் சான்றோனாக, வீரனாக ஆக்கும் கடமையில் அவன் தந்தையே ஈடுபட்டு வருகிறார்.
4


படைத்தலைவர்: வீரனுக்கு வீரத்துடன் படைக்கலனும் வேண்டுமே.
பொன்முடியார்: அவனுக்கு வேல் வடித்துக்கொடுப்பது கொல்லனின் கடன்.
சேரன்: என் கடமையையும் சுட்டிக் காட்டுங்கள்
பொன்முடியார்: நாட்டில் நல்லொழுக்கம் நிலவ இப்போது சரியாகக் கடைமையாற்றி வருகிறீர்கள்.
சேரன்: அவரவர் கடமையை அவரவர் ஆற்றினால் நாடும் வீடும் நலம் பெறுமே.
5


அப்போது வீரன் ஒருவன் வருகிறான்
வீரன்: அரசே! பக்கத்துச் சிற்றூர் குறுநில மன்னர் படைகளோடு வந்து கொண்டிருக்கிறார்.
சேரன்: மழைவிட்டும் தூறல் விடவில்லை. தகடூர் போர் முடிந்தது. தோல்வியுற்றவன் தூண்டுதலால்அடுத்து இந்தப் படையெடுப்பு.
படைத்தலைவர்: உடனே நம் படைகளைத் திரட்டியாக வேண்டும்.
6



பொன்முடியார்: இப்போது மகனே! உன் கடமையைச் சொல்கிறேன். மறக்குடி மைந்தன் நீ.
பொன்முடியார்: ஒளிரும்வாள் ஏந்தி போர்க்களம் சென்று பகைவரின் யானைகளைக் கொன்று நீ வெற்றியோடு திரும்பிவா மகனே!
மகன்: கூறுங்கள் தாயே. கடமையைச் செய்யக் காத்திருக்கிறேன்.
சேரன்: உங்கள் மகனின் கடமை வெல்லும். இந்தக் கடமை வீரன் துணையுடன் நானும் போரில் வெல்வேன்.
7




பொன்முடியார் அவையில் சொன்னதை இப்படிப் பாடலாக்கினார்:
ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்,
களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.
(புறம்: 312)
8